கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா. G, எல்.எல்.எம்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் நாள் திங்கள்கிழமை

**I.A.No.6/2026 in OS 295/2012**

பாப்பா ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

முருகேஸ்வரி ... எதிர்மனுதாரர் /வாதி

இம்மனு இறுதி விசாரணைக்காக 20.07.2026 அன்று வந்தபோது, மனுதாரர் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கணேசன் அவர்கள் ஆஜராகியும், மொழிந்த வாதங்களைக் கேட்டறிந்தும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151ன் படி,

காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மேல்சாட்சியாக விசாரணை செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் /பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u> :–**

அசல் வழக்கினை எதிர்மனுதாரர் வழக்குரை தபசில் சொத்தைப் பொறுத்து தன் மீது விளம்புகையைத் தொடர்ந்த நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், தானும் பிரதான வழக்கில் எதிர்கோரிக்கையின் மூலமாக தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைக்காகவும் மற்றும் கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவக 08.02.2012 ம் தேதிய 583/2012, 27.02.2012 தேதிய 791/2012 மற்றும் 14.03.2012 தேதிய 1041/2012 கொண்ட ஆவணங்களை ரத்து செய்யக்கோரியும் பரிகாரம் வேண்டி எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கில் விசாரணை தொடங்கப்பட்டு, வாதியான எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணை முடிவுற்று, பிரதிவாதியான தன் தரப்பில் பி.வா.சா.1 ஆன தான் சாட்சியமளித்து, தன் தரப்பு மேல்சாட்சி விசாரணைக்காக 01.06.2026 ல் வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், தபசில் சொத்தானது கடந்த 06.01.2011 தேதிமுதல் நாளது தேதிவரை தனது அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்றும், தபசில் சொத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் தனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதற்கு உரிய அடங்கல் பதிவுகளும் வழங்கியுள்ளார் என்றும், மேற்கண்ட ஆவணமும் தனது தரப்பு Ex.B7 சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட ஆவணமானது கிராம நிர்வாக

அலுவலரால் வழங்கப்பட்ட காரணத்தால், அதற்கு சாட்சிய அந்தஸ்து வழங்க வேண்டிய கடமையானது தன்னைச் சார்ந்ததே ஆகும் என்றும், எனவே அவ்விதம் சாட்சிய அந்தஸ்து வழங்குவதற்கு காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை தன்தரப்பு சாட்சியாக விசாரணை செய்தால் மட்டுமே, Ex.B7 ஆவணத்திற்கு சாட்சிய அந்தஸ்து பெற இயலும் என்றும், எனவே இவ்வழக்கில் காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை தன் தரப்பு மேல் சாட்சியாக விசாரணை செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது என்றும், இல்லையெனில் தனக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், இம்மனுவினை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு யாதொரு கஷ்ட, நஷ்டங்களும் ஏற்படக்கூடியதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்</u> :–

பிரதான வழக்கு வாதி பிரதிவாதி தரப்பு சாட்சிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த பிரதிவாதி தரப்பில் தற்போது காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் இந்த மனுதாரர் ஊரில் செல்வாக்கு மிக்க நபர் என்பதால் அவரின் செல்வாக்கினை வைத்தே தபசில் சொத்திற்கு அடங்கல் பதிவு செய்து வருகிறார் என்றும், இந்த மனுதாரர் ஏற்கனவே எதிர்மனுதாரரின் முன்கிரையதாரர்கள் வாங்கிய ஆவணத்தில் மூவேந்திரன் என்பவரின் கையெழுத்து மோசடியானது என்பதினை நிரூபிக்க முனைந்ததில் மேற்படி

கையெழுத்தும் உண்மையானது என்று இந்த மனுதாரருக்கு எதிராகவே நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி உண்மைகள் எல்லாவற்றையும் மறைத்தும் இந்நீதிமன்றத்தில் வழக்கினைக் காலம்கடத்திட வேண்டும் என்ற எண்ணத்திலும், எதிர்மனுதாரரை வீண் கஷ்ட நஷ்டப்படுத்திட வேண்டும் என்ற எண்ணத்திலும், இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும் விவரம் காரிச்சாத்தான்கிராம நிர்வாக அலுவலருக்குத் தெரிந்தும், மேற்படியார் ஒருதலைப்பட்சமாக இந்த மனுதாரருக்கு அடங்கல் பதிவு செய்திருப்பது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், அந்த ஆவணத்திற்கு உரிய சட்ட அந்தஸ்து கிடையாது என்றும், மேலும் பட்டா மற்றும் அடங்கல் பதிவினை மட்டும் வைத்துக்கொண்டு வழக்கில் தீர்முடிவு காண இயலாது என பல்வேறு உயர்நீதிமன்ற தீர்ப்புகள் தெளிவுபடுத்தியுள்ளது என்றும், மேலும் சட்ட அந்தஸ்து இல்லாத ஆவணத்தினை மட்டும் வைத்துக்கொண்டு வழக்கின் தீர்வு முடிவு காண இயலாது என்றும், பிரதான வழக்கினைக் காலம்கடத்திட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுதாரரால் இந்த வம்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரருக்கு பிரதான வழக்கில் நல்ல கட்சி கிடையாது என்பதினை நிரூபிக்கும் வண்ணமாக பல்வேறு மனுக்களை இந்த மனுதாரர் பிரதான வழக்கில் தாக்கல் செய்தவாறு இருப்பதினாலேயே மனுதாரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், மனுதாரர் பிரதான வழக்கில் வாதுரைசெய்யாமலிருப்பதற்காக பல்வேறு மனுக்களைத் தாக்கல் செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி இம்மனு அனுமதிக்கக்கூடியதா என்பதேயாகும்.

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு** :–

6.1. மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தாவாச் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரங்கள்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும், அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில், காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்து கொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

6.2. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், தபசில் சொத்தானது 06.01.2011 தேதி முதல் நாளது தேதி வரை மனுதாரர் அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்றும், தபசில் சொத்து மனுதாரர் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதற்கு கிராம நிர்வாக அலுவலர் உரிய அடங்கல் பதிவுகளை வழங்கியுள்ளார் என்றும், அந்த ஆவணம் மனுதாரர் தரப்பு பி.வா.சா.ஆ.7 சான்றாவணமாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த

ஆவணமானது கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட காரணத்தால் அதற்கு சாட்சிய அந்தஸ்து வழங்க வேண்டிய கடமையானது மனுதாரரைச் சார்ந்தது என்றும், அவ்விதம் சாட்சிய அந்தஸ்து வழங்குவதற்கு காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்தால் மட்டுமே பி.வா.சா.ஆ.7 ஆவணம் சாட்சிய அந்தஸ்து பெறஇயலும் என்றும், அதனால் காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டியது அவசியம் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

6.3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், பிரதான வழக்கு வாதி பிரதிவாதி தரப்பு சாட்சிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த பிரதிவாதி தரப்பில் தற்போது காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் இந்த மனுதாரர் ஊரில் செல்வாக்கு மிக்க நபர் என்பதால் அவரின் செல்வாக்கினை வைத்தே தபசில் சொத்திற்கு அடங்கல் பதிவு செய்து வருகிறார் என்றும், இந்த மனுதாரர் ஏற்கனவே எதிர்மனுதாரரின் முன்கிரையதாரர்கள் வாங்கிய ஆவணத்தில் மூவேந்திரன் என்பவரின் கையெழுத்து மோசடியானது என்பதினை நிரூபிக்க முனைந்ததில் மேற்படி கையெழுத்தும் உண்மையானது என்று இந்த மனுதாரருக்கு எதிராகவே நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி உண்மைகள் எல்லாவற்றையும் மறைத்தும் இந்நீதிமன்றத்தில் வழக்கினைக் காலம்கடத்திட வேண்டும் என்ற எண்ணத்திலும், எதிர்மனுதாரரை வீண் கஷ்ட நஷ்டப்படுத்திட வேண்டும் என்ற எண்ணத்திலும், இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும்,

மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும் விவரம் காரிச்சாத்தான்கிராம நிர்வாக அலுவலருக்குத் தெரிந்தும், மேற்படியார் ஒருதலைப்பட்சமாக இந்த மனுதாரருக்கு அடங்கல் பதிவு செய்திருப்பது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், அந்த ஆவணத்திற்கு உரிய சட்ட அந்தஸ்து கிடையாது என்றும், மேலும் பட்டா மற்றும் அடங்கல் பதிவினை மட்டும் வைத்துக்கொண்டு வழக்கில் தீர்முடிவு காண இயலாது என பல்வேறு உயர்நீதிமன்ற தீர்ப்புகள் தெளிவுபடுத்தியுள்ளது என்றும், மேலும் சட்ட அந்தஸ்து இல்லாத ஆவணத்தினை மட்டும் வைத்துக்கொண்டு வழக்கின் தீர்வு முடிவு காண இயலாது என்றும், பிரதான வழக்கினைக் காலம்கடத்திட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுதாரரால் இந்த வம்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரருக்கு பிரதான வழக்கில் நல்ல கட்சி கிடையாது என்பதினை நிரூபிக்கும் வண்ணமாக பல்வேறு மனுக்களை இந்த மனுதாரர் பிரதான வழக்கில் தாக்கல் செய்தவாறு இருப்பதினாலேயே மனுதாரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், மனுதாரர் பிரதான வழக்கில் வாதுரைசெய்யாமலிருப்பதற்காக பல்வேறு மனுக்களைத் தாக்கல் செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

6.4. இருதரப்பு வாதங்கள், மனு மற்றும் எதிருரை சங்கதிகள் நன்கு பரிசீலிக்கப்பட்டன. பி.வா.சா.ஆ.7 ஆவணம் சர்வே எண்கள்.770/1A1, 770/1A2 , 825/1, 768/4A, 768/4B, 768/5B, 768/5பி ஆகியவற்றிற்கு 1424, 1426, 1428, 1430, 1432 ஆகிய பசலி ஆண்டுகளுக்கு காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சாகுபடி

அடங்கல் கணக்கின் உண்மை நகல்களை உள்ளடக்கியது என்பதையும், மேற்கண்ட ஆவணங்கள் அனுமதிக்கத்தக்க ஆவணங்கள் என்று நீதிமன்றத்தால் கருதப்பட்டு அவை பி.வா.சா.ஆ.7 ஆக மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுவிட்டன என்பதையும் அறிய முடிகிறது. இந்நிலையில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட அடங்கல் ஆவணங்கள் ஏற்கனவே பி.வா.சா.ஆ.7 சான்றாவணமாக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுவிட்டதைக் கருத்தில் கொண்டும், மேற்கண்ட ஆவணங்களின் உண்மைத்தன்மையைப் பொறுத்து எதிர்மனுதாரர்/வாதி ஆட்சேபித்தால் அவர்தான் அந்த ஆவணங்களின் உண்மை நகல்களை அளித்த வகைக்கு காரிச்சத்தான் கிராம நிர்வாக அலுவலரை விசாரிக்க இயலும் என்பதைக் கருத்தில் கொண்டும், பி.வா.சா.ஆ.7 ஆவணங்களாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுவிட்ட மேற்குறிப்பிட்ட அடங்கல் ஆவணங்களின் உண்மை நகல்கள் சாட்சிய அந்தஸ்து பெறும் பொருட்டு காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர் தரப்பு சாட்சியமாக நீதிமன்றத்திற்கு வரவழைத்து விசாரிக்க வேண்டியது அவசியம் என்று மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்துள்ள எடுத்துரைப்பு ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதி, மேற்குறிப்பிட்ட காரணத்திற்காக மட்டும் காரிச்சாத்தான் கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர் தரப்பு சாட்சியமாக நீதிமன்றத்திற்கு வரவழைத்து விசாரிக்க அனுமதி கோரி தாக்கல்செய்யப்பட்ட இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.08.03 17:12:31 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள்</u> :–** – இல்லை –

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.08.03 17:12:35 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

கூ.மா.உ. நீதிமன்றம்,

சங்கரன்கோவில்,

I.A.No.6/2026 in

O.S.No.295/2012

உத்தரவு (Draft / Fair)

நாள் : 03.08.2026